[2008 மே 6

4. கவன ஈர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டம், சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை நிறுத்தப்பட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் எஸ். ஜெயபால், கரி. இராமசாமி, எம்.ஆர். சுந்தரம், பெ.சு. விஜயகுமார், ராம. சுப்புராம், து. அமரமூர்த்தி, டி. சுதர்சனம், எஸ். பீட்டர் அல்போன்ஸ், எஸ். ஜாண் ஜேக்கப், பா. வேல்துரை, கு. ஹசன் அலி, மா. ராஜசேகரன், விடியல் எஸ். சேகர், என்.ஆர். ரங்கராஜன், ஞா. ஜாண் ஜோசப் மற்றும் திருமதி ரா. லீமா றோஸ் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ். (குறுக்கீடு) காங்கிரஸ் கட்சியின் சார்பில் யார் பேசுகிறீர்கள்? திரு. எஸ். ஜெயபால்.

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை நிறுத்தப்பட்டுள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

தமிழகத்தில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழில் கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்குப் பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை மற்றும் இலவசக் கல்வித் திட்டம் ஆகியவற்றின்கீழ் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2008 மே 6] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மேற்குறிப்பிட்ட கல்வி உதவித் தொகைகளைப் பெறுவதற்கான பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.50,000/-லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 658, பிற்படுத்தப்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறை, நாள் 25-7-1989-ல் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்றாண்டு பட்டப்படிப்பு வரை பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவர்களுக்கு இலவசக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 81, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, நாள் 26-4-1990-ல் தொழிற் கல்வி பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்க ஆணையிடப்பட்டது.

அரசாணை (நிலை) எண் 82, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, நாள், 26-4-1990-ல் 3 ஆண்டு பட்டப்படிப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு இலவச கல்வித் திட்டத்தினை நீட்டித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அரசாணை (நிலை) எண் 79, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, நாள் 7-11-1991-ல் தொழிற் கல்விப் பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு இலவச கல்வித் திட்டம் நீட்டிக்கப்பட்டது. அதே அரசாணையில் சுயநிதி தொழிற் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின்கீழ் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கும் இலவச கல்வி உதவித் திட்டம் பொருந்தும் என அறிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் கல்வி உதவித் தொகைகள் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. அரசாணை (நிலை) எண் 79, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, நாள் 7-11-1991-ல் தான் சுய நிதி தொழிற் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின்கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவது குறித்து ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, சுயநிதி

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் சுயநிதி தொழிற் கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டின்கீழ் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதற்கான ஆணைகள் ஏதுமில்லை.

சில மாவட்டங்களில் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும், சுயநிதி தொழிற் கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டின்கீழ் பயிலும் மாணவர்களுக்கும் உதவித் தொகைகள் கடந்த ஆண்டுகளில் தவறாக வழங்கப்பட்டுள்ளன. இத்தவறு மாநில கணக்காய்வுத் துறையின் தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 12 அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 6 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஒரு அரசு மருத்துவக் கல்லூரியும், 3 சுயநிதி மருத்துவக் கல்லூரிகளும், 10 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும், சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின்கீழ் பயிலும் மாணவர்களுக்கும் சுமார் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், மருத்துவம், பல் மருத்துவம், தொழில்நுட்பம், சட்டம், தொழில்நுட்ப பட்டயப் படிப்புக் கல்லூரிகள், தொழிற் பயிற்சிப் பள்ளிகள் இவற்றில் நிர்வாக ஒதுக்கீட்டின்கீழ் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, இவர்களில் கல்வி உதவித் தொகை, இலவச கல்வித் திட்டம் ஆகியவற்றின்கீழ் பயன்பெறத் தகுதி வாய்ந்த மாணவர்/மாணவியர் எண்ணிக்கை இவர்களுக்கு கல்வி உதவித் தொகை, இலவச கல்வி உதவித் தொகை அளிப்பதால் அரசிற்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ஆகிய விவரங்கள் பெற்று விரிவாகப் பரிசீலித்து கொள்கை முடிவு மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரேயொரு அரசு தொழில்நுட்பக்

கல்லூரி இருந்துகொண்டிருக்கிறது. அது 1967-க்கு முன்னாலே தொடங்கப்பட்டது. அதேபோன்று, டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த முறை முதல்வராக இருந்த நேரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டது. அது தவிர கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, அரசு சார்பாகப் பொறியியல் கல்லூரிகளோ, கலைக் கல்லூரிகளோ எதுவுமே இல்லாத நிலையில் அங்கே படிக்கக்கூடிய மாணவர்கள் பெரும்பாலும் சுயநிதிக் கல்லூரிகளிலே படிக்கவேண்டிய ஒரு சூழ்நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. ஏறத்தாழ 23 ஆண்டுகளாக கன்னியாகுமரி மாவட்டத்திலே இருந்துகொண்டிருக்கக்கூடிய சுயநிதிக் கல்லூரிகளிலே படித்து வந்த பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினத்தைச் சார்ந்த மக்கள் அரசு வழங்குகின்ற கல்வி உதவித் தொகையைப் பெற்று வந்தார்கள். ஆனால், அவர்களுக்கு 23 ஆண்டுகளாக அரசு வழங்கி வந்த அந்தக் கல்வி உதவித் தொகை இந்த ஆண்டு நிறுத்தப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்காகக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.*

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் B.C. மற்றும் M.B.C. மாணவர்களுக்கும், அதேபோல, அரசு உதவிபெறும் கல்லூரிகளில் சுய நிதியில் துவங்கும் பாடப் பிரிவில் பயிலும் மாணவர்களுக்கும் இந்தக் கல்வி உதவித் தொகை நிறுத்தப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டம், கல்வி அறிவில் சாதனைமேல் சாதனையையும், வேலைவாய்ப்பில் சோதனைமேல் சோதனையையும் சந்தித்து வருகிறது. தற்போது புதிய சோதனையாக இந்தக் கல்வி உதவித் தொகை விஸ்வரூபம் எடுத்துள்ளது. கன்னியாகுமரி மாவட்ட மாணவர்களில் 80 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் B.C. மற்றும் M.B.C. பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மாணவர்களில் பெரும்பான்மையினர் வறுமைக் கோட்டுக்குக்கீழே வாழக்கூடியவர்கள். இன்னும் குறிப்பாகச் சொன்னால், விடுமுறை நாட்களில் அவர்கள் வேலைக்குச் சென்று, பொருள் ஈட்டி தங்களுடைய கல்வியைத்

தொடர்கின்றனர் என்பது ஒரு கசப்பான உண்மை. 100 சதவீத கல்வி அறிவு பெற்ற இந்த மாவட்டத்தில், ஒரு அரசுக் கல்லூரிகூட இல்லாத நிலையில்தான் இந்த மாணவர்கள் சுயநிதிக் கல்லூரியை நாடவேண்டி வந்திருக்கிறது. இன்றையதினம், உயர்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையில் விவாதம் நடக்கின்றபோது, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அரசு கல்லூரிகள் சம்பந்தமான அறிவிப்பு வரும் என்று ஏழை மாவட்ட மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

விவர அறிக்கையில், கடந்த காலத்தில் தவறுதலாக இந்த நிதி வழங்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நிச்சயமாக இது ஏற்புடையது அல்ல. 20 ஆண்டுகளுக்கு மேலாக இந்த நிதி வழங்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த நிதி நிறுத்தப்பட்டதால், அந்த மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் படிப்பைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இது அங்கே ஒரு பெரிய கொந்தளிப்பை உருவாக்கியிருக்கிறது. பல போராட்டங்கள் நடந்திருக்கின்றன. நேற்றையதினம்கூட, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக ஒரு போராட்டம் அங்கே நடந்திருக்கிறது. எனவே, மேற்குறிப்பிட்ட இரண்டு வகையான உதவித் தொகைகளையும் அரசு உடனே வழங்கவேண்டும் என்றும், (மணியடிக்கப்பெற்றது) அதுபோல...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: இதோ முடித்துவிடுகிறேன். அதுபோல், பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு கொண்டுவந்தபோது முஸ்லீம் மற்றும் கிருஸ்தவர்களுக்கு தலா 3.5 சதவீத இட ஒதுக்கீடு அமலாக்கம் துவங்கிய நிலையில், ஏற்கெனவே இருந்ததைவிடவும் தற்போது பலன் குறைந்து இருப்பதாக ஒரு கருத்து நிலவுகிறது. அரசு ஆணையில் ஏதேனும் குழப்பம் இருப்பின் அதையும் சரிசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இதுபோன்ற சுயநிதிக் கலைக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கியது சட்டரீதியாக சரியாக இல்லையென்று சொல்லி, மாநில கணக்காய்வுத் துறை தணிக்கை அறிக்கையில் அரசுக்கு சுட்டிக்காட்டப்பட்டது

2008 மே 6] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

மட்டுமல்லாமல், அந்த மாணவர்களுக்கு வழங்கிய அந்தத் தொகைகளையும் திருப்பிப் பெறச்சொல்லி உத்தரவிட்டும், அதுபோல், சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், அரசுக்கு தணிக்கைத் துறையினர் தகவல் சொல்லியதன் அடிப்படையில், இந்த ஆண்டு அந்த Scholarship வழங்குவதை அரசு நிறுத்தியிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் அங்கொன்றும், இங்கொன்றுமாக எல்லா மாவட்டங்களிலும் இதுபோல் நடந்திருப்பதாக இப்போது எங்களுக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன. பொதுவாக, 1991 ஆம் ஆண்டு அரசாணையிலே சுயநிதி கலைக் கல்லூரிகளில் படிப்பவர்களுக்கு Scholarship வழங்கவேண்டும் என்று ஆணை எதுவும் வழங்கவில்லை. அரசுக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கும், அரசு நிதியுதவி பெற்று நடத்துகிற கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கும், அதுபோல், சுயநிதி பொறியியல் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரியிலே அரசாங்கம் சார்பாக, இட ஒதுக்கீட்டில் வருகின்ற மாணவர்களுக்கு மட்டும்தான் வழங்கச் சொல்லி உத்தரவிடப்பட்டிருக்கின்றது. இந்த மாணவர்களுக்கு வழங்கச் சொல்லி அரசு ஆணை எதுவுமில்லை. அப்படி வழங்கினால், எவ்வளவு பணம் வேண்டும் என்பது பற்றி நாங்கள் இப்போது கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறோம். இதைக் கணக்கெடுத்து, கொள்கை ரீதியாக முடிவு எடுக்க வேண்டிய ஒரு காரியமாக இருப்பதால், இது கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டுமல்ல, உங்களுக்குக் கொடுத்தால் பக்கத்தில் இருக்கிற எல்லா மாவட்டத்திலுள்ளவர்களும் கேட்க இருக்கிறார்கள். ஆகவே, தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை கல்லூரிகளுக்கும் கொடுப்பதானால் ஆண்டிற்கு எவ்வளவு தொகை வரும் என்று கணக்கிட்டு, கொள்கை ரீதியாக முடிவு எடுக்க வேண்டிய நிலை இருப்பதால் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, ஒரு நிறைவான முடிவை அரசு எடுக்கும்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? திரு. எஸ். ஜெயபால், சொல்லுங்கள்.

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துகள் ஏற்புடையவையாக இல்லை. ஏனென்றால், கடந்த 23 ஆண்டுகளாக தமிழகத்திலே, குறிப்பாக கன்னியாகுமரி

[திரு. எஸ். ஜெயபால்] [2008 மே 6

மாவட்டத்திலே இயங்கி வந்த அரசுக் கல்லூரிகள், அரசு உதவி பெறுகின்ற கல்லூரிகள், தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெயபால், கேள்வியை மாத்திரம் கேளுங்கள். (குறுக்கீடு) பெரிய விளக்கம் வேண்டாம்.

திரு. எஸ். ஜெயபால்: சொல்ல வந்ததைச் சொல்லிவிடுகிறேன். தனியார் சுய நிதிக் கல்லூரிகளிலே படித்த மாணவர்களுக்கெல்லாம் கடந்த 23 ஆண்டுகளாக கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. ஆனால், இந்த ஆண்டு மட்டும் அரசு சுய நிதிக் கல்லூரிகளிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகையை வழங்கவில்லை. ஆனால், கடந்த 23 ஆண்டுகளாக இதே கல்லூரிகளிலே படித்த மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. எனவே, எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே நாடார் சமூகம் நடத்துகின்ற சிவந்தி ஆதித்தனார் கல்லூரி, திருவிதாங்கோட்டில் உள்ள சிறுபான்மையின மக்கள் எல்லாம் சேர்ந்து நடத்தக்கூடிய முஸ்லீம் கலைக் கல்லூரி, அதேபோன்று, தொலையாவட்டத்திலே இயங்கி வருகின்ற அன்னை வேளாங்கண்ணி கல்லூரி போன்ற கல்லூரிகளிலே படிக்கக்கூடிய ஏறத்தாழ 2,500-க்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின மாணவர்களுக்கு இந்த உதவித் தொகை கிடைக்கவில்லை. இந்த மாணவர்களைப் பொறுத்தவரையிலே இந்தக் கல்வி உதவித் தொகையைப் பெற்றுதான் தங்களுடைய கல்விக் கட்டணங்களை சுயநிதிக் கல்லூரிகளிலே செலுத்தி வந்தார்கள். இந்தக் கல்விக் கட்டணம் நிறுத்தப்பட்டால் நிச்சயமாக இந்த மாணவர்களால் கல்வியைத் தொடர இயலாது. எனவே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே இங்கே ஆண்டு கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின மக்கள் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நம்பிக்கைக்குரிய தலைவராக, நம்பிக்கை நட்சத்திரமாக இருந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே, நிச்சயமாக டாக்டர் கலைஞருடைய அரசு இந்த பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு, குறிப்பாக எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த அரசு . . .

2008 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெயபால், கேள்வியை மாத்திரம் கேளுங்கள். பெரிய விளக்கம், பெரிய debate நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

திரு. எஸ். ஜெயபால்: அந்த 2,500 மாணவர்களுக்கும் இந்த ஆண்டு அரசு கல்வி உதவித் தொகை வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் பேசிக்கொண்டிருக்கிறார். இது கன்னியாகுமரி மாவட்டத்திலே தொடர்ந்து நடந்து வந்து, இந்த ஆண்டு தணிக்கையிலே கண்டுபிடிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி, அரசுக்கு வந்ததன் விளைவாகத்தான் அதை நிறுத்தியிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தளவிற்கு இப்படிக் கொடுத்தால் எவ்வளவு பணம் வேண்டும், தமிழ்நாட்டிலே மொத்தம் 473 சுயநிதி கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. அதிலே படிக்கிற மாணவர்கள் அத்தனை பேரும் உதவித் தொகை கேட்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அப்படியெல்லாம் வழங்குகிற நேரத்திலே எவ்வளவு நிதிச் சுமை வரும் என்பதையெல்லாம் ஆய்வு செய்து, அப்படி தமிழ்நாடு முழுவதும் கொடுக்கிற நேரத்திலே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு சட்டம், வேறு மாவட்டத்திற்கு ஒரு சட்டம் என்று போட முடியாது. இப்பொழுது தணிக்கை அறிக்கையிலே எப்படி வந்திருக்கிறது என்று சொன்னால், கொடுத்த பையன்களிடம் பணத்தை recovery பண்ண வேண்டும் என்று வந்திருக்கிறது. அதையும் நாங்கள் நிறுத்தி வைத்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்திருக்கிறோம். எவ்வளவு பணம் தேவை என்பதையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, கொள்கை ரீதியாக இதிலே ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.